செ.வெ.எண்:06 நாள்:04.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றுவது குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட முதன்மை நீதிபதி திரு.A.K.A.ரஹ்மான் அவர்கள் வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் பேருந்து நிலையத்தில் **''மண்ணையும், மனிதர்களையும் மலடாக்கும் சீமைக்கருவேல மரங்களை அகற்றுவது''** குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் **விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை** மாவட்ட முதன்மை நீதிபதி **திரு. A.K.A.ரஹ்மான்** அவர்களும், மாவட்ட வருவாய் அலுவலர் **செல்வி.பத்மஜாதேவி** அவர்களும் இன்று (04.03.2017) வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள் தெரிவித்ததாவது :-**

சீமைக்கருவேல மரங்கள் என்பது மனிதர் குலத்திற்கு மிக ஆபத்தான மரமாகும். இந்தியாவில் 1950-ம் ஆண்டு விறகு தேவைகளுக்காக இவ்விதைகள் தூவப்பட்டன. ஆனால், அவ்விதைகள் மூலம் இன்று தமிழக முழுவதும் சீமைக்கருவேல மரங்கள் படர்ந்து ஏறத்தாழ 25 சதவீதம் விளை நிலைங்களை ஆக்கிரமித்து பாழ்படுத்திக்கொண்டிருக்கிறது. இம்மரமானது, 40 அடி ஆழத்திற்கும், 40 அடி அகலத்திற்கும் மேலாக நிலத்தடி நீர் உறிஞ்சும் தன்மை உடையதால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. மேலும், மனித உடலுக்கு கேடுவிளைவிக்குமான கார்பன்டை ஆக்சைடு கரிமல வாயுவை அதிக அளவில் வெளியேற்றி வருவதால், நோய் எதிர்ப்பு சக்தி மனிதர்களுக்கு குறைந்து விடும். இவற்றினை அடிவேருடன் களையாவிட்டால் நிலத்தடி நீர் விஷமாகிவிடும்.

இதனைத்தொடர்ந்து பொதுநல வழக்காக உயர்நீதி மன்றத்தில் சீமைக்கருவேல மரங்களை அகற்றப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டத்தின் பேரில் உயர்நீதி மன்றம் ஆணையின்படி தமிழகத்திலுள்ள அனைத்து சீமைக்கருவேல மரங்களும் அகற்றிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் இம்மாவட்டத்தில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் அகற்றும் பணி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அரியலூர் மாவட்ட நீதித்துறையின் சார்பாக விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அனைத்து கிராமங்களிலும் வழங்கப்படவுள்ளது. இதன் ஒருபகுதியாக அரியலூர் பேருந்து நிலையத்தில் **''சீமைக்கருவேல மரங்களை வெட்டி வீழ்த்துவோம், நம் மண்ணின் மாண்பை காப்போம்''** என்ற விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றுவதோடு, பூவரசமரம், புங்கமரம், ஆலமரம், அத்திமரம், வேப்பமரம் போன்றவற்றை அந்த இடத்திலேயே நட்டு நமது சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதோடு, அடுத்த தலைமுறைக்கு சுகாதாரமான வாழ்வை ஏற்படுத்துவோம் என மாவட்ட முதன்மை நீதிபதி **திரு.A.K.A.ரஹ்மான்** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தலைமை குற்றவியல் நீதிபதி திரு.ரவி, சார்பு நீதிபதி மற்றும் இலவச சட்ட உதவிமையத்தலைவர் திரு.நாகராஜன், மாவட்ட உரிமையியல் நீதிபதி திரு.சீனிவாசன், குற்றவியல் நீதித்துறை நடுவர் திருமதி.மகாலெட்சுமி, அரியலூர் மாவட்ட வழக்கறிஞர் சங்கத்தலைவர் திரு.பழனிசாமி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.அசோக்குமார், துணை கண்காணிப்பாளர் திரு.வெங்கடேசன், அரியலூர் வட்டாட்சியர் திரு.முத்துகிருஷ்ணன், அனைத்து வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.